# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM ජේසියම්



சிறந்ததில் மிகச்சிறந்தது

OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS

MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com

CUSTOMER CARE
+94 77 722 2259



குரல் - 55 | 14.05.2023 (ஞாயிற்றுக்கிழமை) | வைகாசி மாதம் | பக்கங்கள் 6 | ஊக்குவிப்பு : ரூ.30.00




## திருகோணமலையில் பௌத்த ஆக்கிரமிப்பினை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

திருகோணமலை நகர் பகுதியில் தொல்லியல் திணைக்களத்தினரால் வேலியிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் நிலப் பகுதியில் தாய்லாந்திலிருந்து பௌத்த துறவிகளது வருகையுடன் புத்தர் சிலை பிரதிஸ்டை செய்யப்படவுள்ளமையை எதிர்த்து ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பக்கம் 5



பக்கம் 5

## மீண்டும் குரங்குகளுக்கு ஆபத்து...! சீனாவின் முயற்சி வெற்றி

ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவிற்கு வழங்கும் நடவடிக்கையினை வரவேற்பதாக என உக்குவலை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சீனாவினால் கோரப்பட்ட ஒரு இலட்சம் குரங்குகளில் 10 ஆயிரம் குரங்குகளை மாத்தளை மாவட்டத்தில் இருந்து வழங்க எதிர்பார்ப்பதாக விளையாட்டு மற்றும்

## ரணில் தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார் சிறிதரன் எம்.பி காட்டம்



பக்கம் 5

தமிழ் மக்களை ஏமாற்றுவதில் அதிபர் ரணில் விக்கிரமசிங்க குறியாக இருக்கின்றாரே தவிர தமிழர்களுக்கு ஒரு தீர்வை வழங்க தயாராக இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது அலுவலகமான அறிவகத்தில் நேற்று (13-05-2023) பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு




பக்கம் 5

## யாழ். தையிட்டி விகாரையில் ஒன்று திரண்ட தமிழர்கள்: விகாரை காணி மக்களுடையது அல்ல : அருண் சித்தார்த்

யாழ். தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு ஆதரவு தெரிவித்து நேற்று (13) பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாண சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில், "அனைத்து மதங்களையும் ஒன்றாக மதிக்க வேண்டும்" என்ற தொனிப்பொருளில் இப்பேரணி தையிட்டி சந்தியிலிருந்து விகாரை

## சம்பந்தனின் வேண்டுகோளிற்கிணங்க திருகோணமலையில் தடுத்து நிறுத்தப்பட்ட புத்தர் சிலை விவகாரம்!



பக்கம் 5

திருகோணமலை மாவட்டத்தில் இன்றையதினம் முன்னெடுக்கப்படவிருந்த தாய்லாந்து நாட்டினை சேர்ந்த பௌத்த மத தலைவர்களது சடங்கானது இடமாற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டது. மேலும் திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அமைதியின்மையை தடுக்கும் நோக்கில் குறித்த நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. தாய்லாந்தில் இருந்து வரும் குழவினரால் திருகோணமலை நெல்சன் திரையரங்கிற்கு முன்னால் தொல்லியல் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடத்தில் பிரித் நிகழ்வு

## பேரினவாத அரசாங்கம் தமிழ் மக்களை மோசமாக சீண்டிக் கொண்டுள்ளது: சட்டத்தரணி சுகாஸ்



பக்கம் 5


சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கம் அண்மைக்காலமாக தமிழ் மக்களை மோசமாக சீண்டிக் கொண்டிருப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கனகரத்தினம் சுகாஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் (13.05.2023) திருகோணமலையில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

## பதவிகளுக்காக விலை போகிறவர்களை ஆளுநராக்க வேண்டாம் !

### ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் – வன்னியசிங்கம் பிரபாகரன்

ஜனநாயகத் தேர்தலை நிறுத்தி பதவிகளுக்காக விலை போனவர்களை வட மாகாண ஆளுநராக்க வேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வன்னியசிங்கம் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.



பக்கம் 5

# தாயகத்தில் இன அழிப்பிற்கான புதிய ஆதாரங்கள்: மே18 பகிரங்கப்படுத்தவுள்ள பிரித்தானிய தமிழர் பேரவை!



தமிழர் தாயகப் பகுதி தொடர்ச்சியாக கபளீகரம் செய்யப்படுவது தொடர்பில் புதிய ஆதாரங்களை தாம் சேகரித்துள்ளதாக பிரித்தானிய தமிழர் பேரவையின் பொது செயலாளர் வி. ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி, இனப்படுகொலை ஆவணப்படுத்தல் தொடர்பில் 2014 ஆம் ஆண்டு பிரித்தானிய தமிழர் பேரவை பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தமிழர் தாயகப் பகுதியில் புதிய பௌத்த ஆலயங்கள் நிறுவப்பட்டு தமிழர் நிலங்கள் கபளீகரம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதேவேளை வடக்கு கிழக்கில் தமிழர் பூர்வீகம் அழிக்கப்பட்டு பௌத்த மயமாக்கலும் சிங்கள மயமாக்கலும் பெருமளவு முனைப்புடன் மேற்கொள்ளபட்டு வருகின்றது.

இது தொடர்பில் 2015 மற்றும் 2016 காலப் பகுதியில், தகவல்களைத் திரட்டி ஆவணப் படுத்தல் புத்தகம் ஒன்றை தயார்ப்படுத்தி, பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பப்பட்டது.

இதன் போது இது வரை வெளிவராத பல புதிய ஆதாரங்களையும் பிரித்தானிய தமிழர் பேரவை சேகரித்துள்ளது. அந்த வகையில், வடக்கு கிழக்கு, தமிழர் பெரும்பான்மையாக வாழ்ந்த பூர்வீக பிரதேசங்களே எனவும் இங்கே பெரும்பான்மையாக தமிழரே வாழ்ந்தார்கள் என்பதற்கான புதிய ஆதாரங்கள் பலவும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இவ்வாறு தம்மால் சேகரிக்கப்பட்டுள்ள முக்கிய ஆணவங்கள் தொடர்பான விபரங்களை எதிர்வரும் மே-18 இன அழிப்பு நாளில் வெளியிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆதாரங்களை வெளியிடுவதன் மூலம் வடக்கு கிழக்கில் தமிழரின் இருப்பை உலக நாடுகளும் மறுக்க முடியாதபடியான ஒரு நிலையே ஏற்படும் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 13ஆம் திருத்தம் தமிழ் மக்களுக்கான சரியான தீர்வு அல்ல என பிரித்தானிய தமிழர் பேரவையின் மனித உரிமை செயற்பாடுகளின் இணைப்பாளர் சண் றதீஸ் (சுதா) தெரிவித்துள்ளார்.

அதேவேளை இனப்படுகொலையாளிகளை சர்வதேச கூண்டில் ஏற்றுவதே பிரித்தானிய தமிழர் பேரவையின் முக்கிய நோக்கம் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், இலங்கையில் 1948 ஆம் ஆண்டு முதல் இனப்படுகொலை இடம்பெற்றது என்பதற்கான ஆதாரங்களுடன் 2021 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில், பிரித்தானிய தமிழர் பேரவை, சிறிலங்காவிற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ் இன அழிப்பு நாளான மே-18 அன்று பிரித்தானியாவில் வாழும் தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து உணர்வுபூர்வமாக நினைவேந்தல் நிகழ்வை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன் போது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் இளைஞர் யுவதிகளால், இனப்படு கொலையை எடுத்துகாட்டும் வகையிலான நிகழ்வுகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுன்றி, பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## இந்திய இழுவை வலைப் படகுகள் ஏற்படுத்தும் அழிவுகளுக்கு நட்ட ஈடு ஈடாகாது

### தடுத்து நிறுத்துமாறு அமைச்சர் டக்ளஸிற்கு அழுத்தம்!






இலங்கையின் கடல் வளங்களை அழிக்கும் வகையில் இந்தியக் கடற்றொழிலாளர்கள் இலங்கை கடலில் மேற்கொண்டு வருகின்ற சட்டவிரோதமான இழுவைமடி வலைத் தொழிலை முற்றாக கட்டுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், இழப்பீடுகள் எவையும் இந்தியப் படகுகளினால் ஏற்படுத்தப்படுகின்ற அழிவுகளுக்கு ஈடாக அமையாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலாபத்திற்கான விஜயத்தினை நேற்று (13.05.2023) மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் குறித்த பிரதேச கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுக்குமான கலந்துரையாடலின் போதே மேற் குறிப்பிடப்பட்ட விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறி எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில்முறை காரணமாக சிலாபம் புத்தளம் பிரதேச கடற்றொழிலாளர்கள் மாத்திரமன்றி வடக்கு மாகாணத்தை சேர்ந்த கடற்றொழிலாளர்களும் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டு வருவதாகவும், அதனை தடுப்பதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தினார்.

அதேவேளை, இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதி வழங்குவது தொடர்பாக சிலாபம் கடற்றொழிலாளர்களினால் வெளிப் படுத்தப்பட்ட சந்தேகத்தினை, முற்றாக மறுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விரைவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளமையில், குறித்த விஜயத்தின் போது கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

சிலாபம் பகுதியில் வாழ்ந்து வருகின்ற சுமார் 15,000 கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சருக்கும் இடையிலான இன்றைய கலந்துரையாடலில், சிலாபம் மீன் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள சந்தை கட்டிடத்தில் வியாபார நடவடிக்கையை முன்னெடுத்தல், சிலாபம் துறைமுகத்தில் பொருத்தப்பட்டிருந்த வானொலி தொடர்பாடல் கருவியை பழுதுபார்த்து செயற்படுத்தல், பேர்ள் எக்ஸ்பிரஸ் நட்ட ஈட்டினை சிலாபம் கடற்றொழிலாளர்களுக்கும் கிடைக்கச் செய்தல், ஒயிலை குறைந்த விலையில் பெற்றுக் கொடுத்து கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருள் செலவை கட்டுப்படுத்தல் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.






முள்ளிவாய்கால் நினைவு மாதம் என்பதால் முள்ளிவாய்க்கால் சம்பந்தப்பட்ட உங்களது ஆக்கங்களை எமக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வையுங்கள்...!
E-mail : thesiyamnews@gmail.com
Whatsapp : +94 76 567 3339

# மானுட வரலாற்றின் துயரமான அத்தியாயங்கள்:

# இனப்படுகொலையும் சர்வதேச சட்டங்களும்!

'இனப்படுகொலை' (Genocide) என்பது முறைப்படுத்தப்பட்ட மற்றும் விரிவான முறையில் இனவரையறை, நிற பேதமை, மதம் மற்றும் தேசியம் என்ற ஏதாவதொரு வகையில் ஒரு இனத்தை பாகுபடுத்தி, அந்த இனத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிப்பது ஆகும்.

இனப்படுகொலைக்கு எதிராக ஐக்கிய நாட்டு அமைப்பின் புதிய சட்டம் 1951 ஆம் ஆண்டு அமலுக்கு வந்தபின், அதன் அப்போதைய 80 உறுப்பு நாடுகளும் அந்த சட்டத்தின் சரத்துக்களை தங்கள் நாட்டு சொந்த சட்டத்தில் இணைத்தன. இந்த செயலானது, குற்றவாளிகளை பரந்த அளவில் அடையாளம் காண்பதற்கு உதவி புரிந்தது எனலாம்.

உலகம் முழுவதும் பல நாடுகளிலும் கடந்த 250 ஆண்டுகளில் இனப்படுகொலைகள் என்ற பெயரில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் என ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை லட்சமோ, கோடியோ அல்ல பல மில்லியன்களைத் தாண்டுகிறது என்பதுதான் உண்மை.

ஓர் இனத்தை அது இருந்த சுவடே தெரியாமல் அழிப்பதாகவும், ஓர் இனத்தின் அல்லது அந்தக் குழுவின் உறுப்பினர்களைக் கொல்வது, குழு உறுப்பினர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதே இனப் படுகொலையாகக் கருதப்படுகிறது. ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களை கொத்துக் கொத்தாகக் கொன்று குவிப்பதுடன், அடுத்த தலைமுறை உருவாக விடாமல் தடுப்பதும் இனப்படுகொலையாகப் பார்க்கப்படுகிறது.

இனப்படுகொலையானது ஆங்கிலத்தில் (Genocide) ஜெனோசைட் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஜெனோசைட் என்ற வார்த்தையை ரஃபேல் லெம்கின் என்ற போலந்து நாட்டைச் சேர்ந்த யூத வழக்கறிஞர், நாஸி தாக்குதலிலிருந்து தப்பி, அமெரிக்காவில் தஞ்சமடைந்தபோது லத்தீன் - கிரேக்க - பிரெஞ்ச் மூலங்களிலிருந்து உருவாக்கினார் என அறியப்படுகிறது.

1933 ஆம் ஆண்டு ஈராக்கில் நடந்த அசீரிய (Assyrian) இனப் படுகொலையானது, ரஃபேல் லெம்கின் நினைவை முதலாம் உலகப் போரின்போது நடந்த ஆர்மீனியப் படுகொலையை நோக்கி நினைவு படுத்துச் சென்றது. எனவே இனப்படுகொலை என்ற காட்டுமிராண்டி செயலுக்கெதிரான சர்வதேச சட்ட வடிவுக்கான ஒரு முன்வரைவை அவர் ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் இருந்த சர்வதேச நாடுகள் கூட்டமைப்பின் (லீன் ஆஃப் நேஷன்ஸ்) சட்ட கவுன்சிலுக்கு அப்போது வழங்கினார்.

உலகில் இனப்படுகொலை என்பதற்கு அனைவரும் ஏற்றுக்கொள்ளும் படியான ஒரு விளக்கத்தை இன்று வரை பெறமுடியாததற்கு இந்த அரசியல் பிரச்சனைகளே காரணம் என்றும், விமர்சிக்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு நாடும் தனது அரசியல் நலனுக்கேற்ப இந்த விஷயத்தில் நடந்து கொள்கின்றன.

ஒரு இனப்படுகொலை நடந்த முடிந்தபிறகு குற்றவாளிகளை தண்டிப்பதற்கு சர்வதேச அளவில் சில நாடுகள் நடவடிக்கை எடுக்கின்றன. ஆனால் அந்தப் படுகொலை நடவடிக்கையில் அந்த நாடுகள் ஏன் எதுவுமே செய்வதில்லை என்ற பாரதூரமான விமர்சனம் எப்போதும் உண்டு.

**சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள்:**




இனப்படுகொலை ஒரு சர்வதேச சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படும் ஒரு குற்றமாகும். இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த பிறகு, இனப்படுகொலை என்பது கட்டாயத் தேவையின்படி, ஒரு மாபெரும் சர்வதேச குற்றமாக கருதப்பட்டாலும், அதை விசாரிக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள் இருந்தாலும், சம்பந்தப்பட்ட நாடுகளோ அல்லது வலிமை வாய்ந்த நாடுகளோ ஒத்துழைக்காமல் சட்டத்தாலும், நீதிமன்றத்தாலும் எதுவும் செய்துவிட முடியாது என்பது மட்டும் உண்மை.

ஈரானில் 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய பஹாய் (Bahai) என்ற சமயத்தின் நம்பிக்கையாளர்கள் சுமார் 25 ஆயிரம் பேரை அந்நாட்டு ஷியா இஸ்லாமிய அரசாங்கம் கொன்று குவித்தது. அவர்களின் சொத்துக்களையும், உரிமைகளையும் பறித்தது. பலரை நாட்டை விட்டு விரட்டியது. இன்று வரை அந்நாட்டில் பஹாய்களுக்கு கொடுமைகள் நடந்தவண்ணம் உள்ளன.

தொடரும் துயரமாக முதலாம் உலகப்போர் சமயத்தில் ஆர்மீனியா நிலத்தில் துருக்கியர்களால் லட்சக்கணக்கில் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர். ஈராக் மற்றும் துருக்கி பிராந்தியத்தின் ஆயிரக்கணக்கான குர்துக்கள் கொல்லப்பட்டனர்.

பின்னர் இரண்டாம் உலகப் போரின் போது, பல லட்சம் யூதர்களை ஹிட்லரின் நாஸிச அரசு படுகொலை செய்தது.

**உலகப் போர்களில் இனப்படுகொலை:**
முதல் உலகப்போரில் ஜெர்மனியோடு சேர்ந்த துருக்கி தோல்வியடைந்தது. தோல்விக்கு பழிவாங்கும் முகமாக ஆர்மீனியர்கள் மீது மிகவும் கோபமடைந்தது ஓட்டோமன் அரசு.

துருக்கு பேரரசைச் சேர்ந்த ராணுவத்தின் மூலம் ஆர்மேனியர்கள் துரோகிகள் என அவர்கள் குற்றம்சாட்டப்பட்டு, கைது செய்து பலர் கொல்லப்பட்டனர். 1915இல் துருக்கி ஓட்டோமன் பேரரசு, முதல் உலகப்போர் தொடங்கும் சமயத்தில் தங்களது இருப்பினைத் தக்கவைத்துக்கொள்ள அந்தப் போரில் ஈடுபட முடிவு செய்தது.

ஏற்கெனவே இழந்த செல்வாக்கினை மீட்க இது உதவும் என்று நம்பி அவர்கள் அதில் இறங்கினர். முதல் உலகப்போரில் ஜெர்மனியோடு இணைந்து களம் கண்டது ஓட்டோமன் அரசு.

துருக்கியின் உள்நாட்டில் அதிகாரச் சண்டை அந்நாட்டிற்கு மற்றொரு தலைவலியாக அமைந்தது. இந்த நிலையில் நிறைய புரட்சி இயக்கங்கள், நாடு முழுவதும் பலவாறாகத் தோன்றின. இதற்கெல்லாம் காரணம் யார் என்று ஆராய்ந்த போது, ஆர்மீனியர்கள்தான் என்று குற்றஞ்சாட்டி அவர்களை படுகொலை செய்தது.

இவ்வாறாக 1915 முதல் 1918-ம் ஆண்டு வரை ஓட்டோமன் அரசால் 5 முதல் 12 லட்சம் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர்.

**ஹிட்லரின் யூத படுகொலை :**



யூதர்களை கொடுமைப்படுத்துவது, துன்புறுத்துவது, கொலைசெய்வது என இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த சூழலில், தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. உண்மையில் ஹிட்லரால் ஜெர்மனியில் யூதர்கள் கொடூரமாக திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

யூதர்கள் நெருக்கடியான பகுதிகளில் அடைத்துவைக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து சரக்குத் தொடர் வண்டிகள் மூலம் நூற்றுக்கணக்கான மைல்கள் தொலைவில் இருந்த வதை முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பலர் வழியிலேயே இறந்து போயினர். எஞ்சியோர் நச்சுவாயு அறைகளுள் அடைத்துக் கொல்லப்பட்டனர்.

இரண்டு வகையான முகாம்களை நாஜிக்கள் அமைத்தனர். ஒன்று, சாதாரண கைதி முகாம். இதில் கைதிகளை அடிமை போல் நடத்தி, அவர்களை கசக்கிப் பிழிந்து வேலை வாங்குவார்கள். தேவையில்லாமல் கொல்லமாட்டார்கள். இன்னொன்று வதை முகாம்கள், இவை யூதர்களை கொல்வதற்காகவே உருவாக்கப்பட்டதாகும்.

**கம்போடியாவில் பொல் பொட் அரசின் கோரம் :**



கம்போடியாவில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற வேண்டும் என்று எண்ணினார் ஆட்சியேறிய பொல் பொட் (Pol Pot) அரசு. அனைவரும் விவசாயம் செய்ய வேண்டும் எனக் கட்டாயப் படுத்தப்பட்டனர். குறிப்பாக 1975-1979 காலகட்டத்தில் ,

பொது மக்களின் சொத்துக்கள் அனைத்தும் பொதுவுடைமை ஆக்கப்பட்டு, பொல் பொட் அரசால் கைப்பற்றப்பட்டது.

1953-ம் ஆண்டு கம்போடியா பிரான்ஸிடமிருந்து விடுதலை அடைந்த பின், சிஹானக் கம்போடியா அரசனாகப் பொறுப்பேற்றார். கம்போடியன் கம்யூனிஸ்ட் கட்சியின் (கிமேர் ரூஜ் ) தலைவர் ஆன பொல் பொட் சிஹானகை பதவியிறக்கி, பின்னர் 1976-ல் பொல் பொட் பிரதமராகப் பதவியேற்றார். வணிகம், மருத்துவம், தொழில்துறை எனப் பல துறைகள் எல்லாம் நிறுத்தப்பட்டன.

ஆட்சியாளர்களை எதிர்த்து போராடிய மக்களைச் சிறையிலடைத்து சித்ரவதை செய்தும் பசி, பட்டினி மற்றும் சட்டவிரோதமான முறையிலும் படுகொலைகள் அரங்கேற்றப்பட்டன.

குருட்டுத்தனமான கொள்கையும், செயல்முறைப்படுத்தாத திறனும் மக்களை வாட்டின. சுமார் 20 லட்சம் மக்கள் இம்முறையில் கொல்லப்பட்டனர்.

**தொடரும் படுகொலைகள்:**
1975-ல் கிழக்குத் திமோர் மீது இந்தோனேஷியா எடுத்த படையெடுப்பு இனப்படுகொலைகளாக முன்வைக்கின்றனர். அமெரிக்க செவ்வியந்தியர்கள், பாலஸ்தீனியர்கள், காங்கோ, சோமாலியா, கொசாவா என உலக நாடுகளின் வரலாற்றில் "இனப்படுகொலைகள்" தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கின்றன என்பது நிதர்சனம்.

பரவலாக பல நூற்றாண்டுகளில் நடந்த மத மோதல்கள் ஏராளமான மக்கள் தேவையின்றி அழிவதற்கு காரணமாயின. ஒரு மதம், தான் பரவ வேண்டும் என்பதற்காக இன்னொரு மதத்தை அழித்தது.

ஆயினும் உலகில் தோன்றிய எத்தனையோ மறைநெறிகள் இந்தக் கொடுமையை தடுப்பதற்கான போதனைகளை கூறியபோதிலும், மனிதர்கள் தொடர்ந்து அதை மறந்துவிடுகிறார்கள் என்பதே நிஜமாகும்.

**ருவாண்டா இனப்படுகொலை (1994)**



ஜெர்மனியின் காலனியாதிக்கத்தின்கீழ் இருந்த நாடு ருவாண்டா, புருண்டி. இங்கு டுட்சி, ஹுட்டு என்ற இரண்டு இன குழுக்கள் வாழ்ந்து வந்தனர். பல நூற்றாண்டுகளாக டுட்சி இன மக்கள் ஆண்டுவர, பல நூற்றாண்டு காத்திருப்புக்குப் பிறகு,1972-ல் புருண்டியில் ஹுட்டுகளின் புரட்சி தொடங்கியது.

1994 ஏப்ரல் 7 அன்று ஹுட்டு இன மக்கள், டுட்சி இனத்தவரை கொல்லத் திட்டமிட்டனர். பெரியவர், சிறியவர் எனப் பாரபட்சம் இல்லாமல் அனைவரையும் கொன்று குவித்தனர் ஹுட்டு இனத்தினர். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். நான்கு லட்சத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்தனர். அத்துடன் ஆயிரக்கணக்கானோர் முடமாக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**போஸ்னியா இனப்படுகொலை**
பால்க்கன் பிராந்தியத்தில் யூகோஸ்லாவியா விடமிருந்து பிரிந்த நாடு போஸ்னியா ஆகும். 1990களில் புதிதாக உருவாக்கப்பட்ட தேசம் என்பதால் நாடு முழுவதும் குழப்பம் ஏற்பட்டது. அங்கே போஸ்னியர்கள், செர்பியர்கள், குரேஷியர்கள் என மூன்று வகையான இன மக்கள் வாழ்ந்து வந்தனர். குரேஷிய அதிபருக்கும், போஸ்னிய



அதிபருக்கும் ஓர் ஒப்பந்தத்தில் முரண்பாடு ஏற்பட, அங்கிருந்து தொடங்கியது இப்பிரச்சனை.

போஸ்னியாவில் 1993-ம் ஆண்டில் 2000 பேர் கொலை செய்யபட்டனர். 64 இஸ்லாமியர்களைக் கைது செய்து பேருந்தில் அடைத்து, தீவைத்துக் கொளுத்தினர். இதில் 56 பேர் இறந்தனர்.

செர்பிய ராணுவ ஆட்சியில் 1992-1995 காலகட்டத்தில் இரண்டு லட்சம் பேர் கொல்லப்பட்டனர். நான்கு லட்சம் பேர் காணாமல் போனார்கள்.

**டார்ஃபுர் - சூடான் இனப்படுகொலை**



ஆப்பிரிக்காவின் சூடானில் உள்ள டார்ஃபுர் மாநிலத்தில் நடைபெற்ற இப்படுகொலை பொருளாதார ரீதியாக முக்கியமானதாகும். சூடானின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகள் சண்டையிட்டுக் கொள்வதையே வழக்கமாகக் கொண்டிருந்தன. இந்நிலையில் மேற்கு சூடானில் உள்ள டார்ஃபுரில் எண்ணெய் வளம் இருப்பது கண்டுபிடிக்கப்



பட்டது. இதனால் வடக்கு மற்றும் தெற்கு பிரச்சனை மேலும் கொளுந்துவிட்டு எரிந்தது. இவ்வாறாக 1972-ல் உள்நாட்டு யுத்தம் முடிந்து, 1983-ல் மீண்டும் துளிர்விட ஆரம்பித்தது.

கிட்டத்தட்ட 20 வருடங்களில் 20 லட்சம் பேர் உயிரிழந்தனர். 40 லட்சம் பேர் வீடுகளை இழந்து அகதிகளாகினர். தென் சூடான் தனி நாடாக ஜுலை 2011-ல் அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டது சூடான் அரசு.

**ஈழத்தில் தமிழர் படுகொலை :**

ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலை பெரும் வலியையும், ஆற்றாமையையும் இப்போதும் எங்கள் ஈழமண் துயரங்களுடன் தேக்கி வைத்திருக்கிறது. விடியலுக்கான நீண்ட பயணம் தொடர்கிறது.

1983-ம் ஆண்டு “கறுப்பு ஜுலை“ சம்பவம் இன்றளவும் நீங்காவடுவாக தமிழர்கள் மத்தியில் நிலவுகிறது. கண்ணில்பட்ட எல்லாரையும் கொன்று, பெண்கள் பலரும் பாலியல் சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டதுடன், படுகொலையும் செய்யப்பட்டனர்.

1958, 1977, 1983-ம் ஆண்டுகளில் நடந்த இனக்கலவரங்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கவை. ஈழப் போராட்டம் ஆரம்பித்த பின்பு வானூர்த்திகளிலிருந்து கண்மூடித்தனமாக குண்டுவீசுதல், ஏவுகணை வீச்சு, நேரடித் தாக்குதல் போன்றவற்றின் மூலம் இதுவரை சுமார் லட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கானோர் அகதிகளாயினர்.

இன்னமும் தொடரும் துயரமாக, அரசியல் மற்றும் பொருளாதார தேவைகள் மட்டுமே மனிதர்கள் அழிய காரணமாவதில்லை. பல சமயங்களில் அதைவிட சித்தாந்தம், கொள்கை, இனப்பெருமை போன்ற விஷயங்கள் பெரும்பாலான மனித அழிவிற்கு காரணமாகின்றன.

வரலாற்றில் மனித இனம் தோன்றியதிலிருந்து ஒரு இனம் மற்றொரு இனத்தை அழித்து, தனது தேவைகளுக்காக அவர்களின் சொத்துக்களை கவர்ந்து, அவர்களின் இடத்தை ஆக்கிரமித்து வாழ்ந்து வருவதானது இன்று வரையில் ஏதாவது ஒரு வடிவத்தில் தொடர்ந்து வருகிறது. மானுட தர்மம் நீதியற்று போயுள்ளதையே வரலாற்றின் துயரமாக பார்க்கலாம்.

# ஒரு தலைக் காதலால் குடும்பப் பெண்ணிற்கு ஏற்பட்ட பரிதாப நிலை!



வவுனியா நீலியாமோட்டை பகுதியில் சூட்டுக்காயங்களுடன் பெண் உட்பட இருவரது சடலங்களை காவல்துறையினர் மீட்டுள்ளனர்.

பெண் ஒருவர் துப்பாக்கியால் சுடப்பட்ட நிலையிலும், ஆண் ஒருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்திருக்கலாம் எனவும் காவல்துறையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், வவுனியா பறயனாளங்குளம் காவல்துறை பிரிவுக்குட்பட்ட நீலியாமோட்டை பகுதியில் ஒருதலை காதல் காரணமாக குடும்ப பெண் ஒருவர் உள்ளூர் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அதேவேளை பெண்ணின் படு கொலைக்கு காரணமான 24 வயதுடைய இளைஞன் ஒருவரும் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துள்ளார். நீலியாமோட்டையில் வசிக்கும் நியூட்டன் என்ற குடும்பஸ்தர் தனது மனைவி மற்றும் 1 1/2 வயது மகளையும் மனைவியின் அத்தையின் வீட்டில் தங்க வைத்துவிட்டு, இரவு நேரம் மீன் பிடிப்பதற்காக சென்றுள்ளார்.

குளத்தில் மீன் பிடிப்பதற்காக சென்ற அவர் நேற்று அதிகாலை வீட்டிற்கு சென்றுள்ளார். இதன்போது வீட்டின் அறையில் உறங்கிகொண்டிருந்த தனது மனைவி இரத்தவெள்ளத்தில் இறந்து கிடந்தமை கண்டு அதிர்ச்சியடைந்துடன் அங்கு தூங்கிக்கொண்டிருந்த மனைவியின் அத்தையை எழுப்பி சம்பவத்தை தெரிவித்ததுடன் அயலவர்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பாக காவல்துறையினருக்கும் தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்திற்குசென்ற பறயனாளங்குளம் காவல்துறையினர் விசாரணைகள் முன்னெடுத்தனர். குறித்த பெண் இடியன் துப்பாக்கியால் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டு ள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்ததை அடுத்து காவல்துறையினர் அதனுடன் தொடர்புடைய இளைஞர் ஒருவரை சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

எனினும் தேடப்பட்ட இளைஞர் அவரது வீட்டிற்கு அருகில் உள்ள ஆலயத்திற்கு முன்பாக சூட்டுக்காயத்துடன் சடலமாக கிடந்தமை கண்டறியப்பட்டது. அவரது சடலத்துடன் இடியன் துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டது. சம்பவத்தில் நியூட்டன் தர்சினி வயது 26 என்ற ஒரு பிள்ளையின் தாயும், சிவபாலன் சுயாந்தன் வயது 24 என்ற இளைஞருமே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த பெண்ணை உயிரிழந்த இளைஞர் ஒரு தலைபட்சமாக காதலித்து வந்துள்ளதாக அயலவர்கள் தெரிவித்ததுடன், அந்த பெண் திருமணம் முடித்த பின்னரும் அவருக்கு தொடர்ச்சியான தொந்தரவுகளை கொடுத்து வந்ததாக காவல்துறையினர் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எனவே உயிரிழந்த இளைஞன் இடியன் துப்பாக்கி மூலம் அந்த பெண்ணை கொலை செய்ததுடன், தானும் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்ற அடிப்படையில் காவல்துறையினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கம்பளையில் 22 வயது யுவதி கொலை..! வாக்குமூலத்தின் அடிப்படையில் மீட்கப்பட்ட சடலம்!!



கம்பளையில் காணாமல் போயுள்ள 22 வயது யுவதி பாத்திமா முனவ்வராவினுடையது என கூறப்படும் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த யுவதி கொலை செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் நிலையில் கைதான சந்தேகநபர் அடையாளம் காட்டிய இடத்தில் கம்பளை நீதவான் முன்னிலையில் தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக அந்த பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கம்பளை பகுதியைச் சேர்ந்த 22 வயது யுவதியொருவர் கடந்த 7ஆம் திகதி முதல் காணாமல் போனதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் அந்த யுவதியை கொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படும் நிலையில், சம்பவம் தொடர்பில் கைதான 24 வயது சந்தேகநபர் நேற்று முன்தினம் வாக்குமூலமொன்றை வழங்கியுள்ளார்.

அந்த வாக்குமூலத்தில் குறித்த யுவதியை காட்டுப்பகுதிக்கு அழைத்துச் சென்று கொலை செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலையில் பௌத்த...

இந்த ஆர்ப்பாட்டமானது நேற்று (13.05. 2025) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழர் பகுதிகளில் திட்டமிட்ட பௌத்த ஆக்கிரமிப்பினை இந்த அரசானது உடன் நிறுத்த வேண்டும் என்றும், தமிழர்களது பூர்வீக நிலங்கள் தொடர்ச்சியான பௌத்தமயமாக்கப்படும் நிலைமைகள் உடனடியாக தடுக்கப்பட வேண்டும் எனும் குறிப்பிட்டு இந்த போராட்டமானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த ஆர்ப்பாட்டத்தின் போது திருகோணமலை மாவட்ட அரச அதிபர் விஜயம் மேற்கொண்டு திட்டமிட்ட படி நடைபெற இருக்கும் தாய்லாந்து பௌத்த பிக்குகளது நிகழ்வில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், துறவிகள் எவரும் குறித்த தொல்பொருள் இடத்தினுள் செல்லப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டம் செய்வது எமது உரிமை அதற்கு யாரும் தடை போட வேண்டாம். இவ்வாறு பல சம்பவங்கள் நிகழ்ந்திருகின்ற போதிலும், அது தமிழர்கள் மீதான இன ஒடுக்குமுறையாகவே மாறியுள்ளதாக தெரிவித்து குறித்த இடத்தில் ஆர்ப்பாட்டமானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் பொது மக்கள் என பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் குரங்குகளுக்கு ஆப...

இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை குரங்குகள் காரணமாக பல பிரதேசங்களில் கித்துல் தொழில்துறை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எஹலியகொடை மற்றும் இரத்தினபுரி பகுதிகளிலுள்ள கித்துல் தொழில்துறையினர் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்த போதே இந்த விடயம் தெரிய வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குரங்குகள் கித்துல் பூவை அழிப்பதன் காரணமாக ஒரு போத்தல் கித்துல் பாணியையேனும் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தொழில்துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## ரணில் தமிழ் மக்களை...

கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "அண்மையில் அதிபருடன் நடைபெற்ற சந்திப்பின் போது தொல்லியல் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டு ஆக்கிரமிக்கப்படுகின்ற காணிகள் தொடர்பில் எடுத்துக் கூறியிருந்தோம்.

அந்த இடத்தில் தொல்லியல் திணைக்களமும் இருந்துள்ளது, அவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்துமாறு உத்தரவிட்டிருந்தார்.

ஆனால் எதிர்வரும் 18 ஆம் திகதி உருத்திரபுரம் சிவாலயத்தின் காணியை அளவீடு செய்வதற்கான கடிதங்களை ஆலய நிர்வாகத்திற்கு அனுப்பி இருக்கின்றது.

இவ்வாறு ஒரு புறத்தில் தமிழர்களுக்கு தீர்வை வழங்குவதாக தெரிவித்து பேச்சுக்களை நடத்திக்கொண்டு மறுபுறத்தில் இவ்வாறு காணி அளவீடுகளை செய்ய முனைவது என்பது மக்களை ஏமாற்றுகின்ற ஒரு செயலாகவே காணப்படுகின்றது.

கடந்த 09 ம் திகதி நாடாளுமன்றத்தில் வடக்குக் கிழக்கிலே தமிழர்களுடைய வழிபாட்டிடங்கள் இடித்தளிக்கப்பட்டு புத்தர் சிலைகள் நிறுவுதல், விகாரைகள் அமைக்கப்படுகின்றன எனும் விடயத்தை நான் நாடாளுமன்றத்திற்கு கொண்டு வந்திருந்தேன்.

அது தொடர்பாக விடயங்களை குறிப்பிட்டு, இடங்களையும் அடையாளப்படுத்தி ஒரு அறிக்கை சமர்ப்பித்திருந்தேன்.

உருத்ரபுரம் சிவாலயத்தை எதிர் வரும் 18 ஆம் திகதி அளவீடு செய்வது தொடர்பில் அறிவிக்கப்பட்டமை தொடர்பாக அதிபருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி இருக்கின்றேன்.

அதன் பிரதிகளை மாவட்ட அரச அதிபர் மற்றும் வடமாகான ஆளுநர், பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி இருக்கின்றேன்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிபராக இருந்து கொண்டு நடத்த வேண்டிய தேர்தலை நடத்த விடாது அதனை தடுத்து வருகின்றார். எதை நிறுத்த வேண்டுமோ அதை நிறுத்துவதற்கு அவர் தயாராக இல்லை.

தமிழ் மக்களை ஏமாற்றும் விதத்திலேயே அதிபர் குறியாக இருக்கின்றாரே தவிர, தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை வழங்குவதற்கு தயாராக இல்லை." என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

## பேரினவாத அரசாங்கம் தமிழ்...

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், குருந்தூர்மலை, தையிட்டி, வெடுக்குநாறிமலை என சீண்டிய இந்த பௌத்த பேரினவாத அரசாங்கம் நேற்று தமிழர் தாயகமான திருகோணமலையுடைய வில்லுண்டி முருகனுக்கு சொந்தமான காணியை ஆக்கிரமித்து, நியூசிலாந்தில் இருந்து பிக்குகளை கொண்டு வந்து நாலடி உயரத்தில் சிலை வைக்கப் போகின்றார்களாம்.

இது தமிழர்களை சீண்டுகின்ற செயற்பாட்டின் அதி உச்சம், இதை நாங்கள் அனுமதிக்க போவது கிடையாது. தமிழர்களுடைய தாயகத்தை திட்டமிட்டு கபளீகரம் செய்கின்ற செயற்பாட்டில் ரணில், ராஜபக்ச அரசாங்கத்தின் வீச்சு தீவிரம் பெற்றுள்ளது. இதற்காக தமிழ் மக்களாகிய நாம் ஜனநாயக ரீதியில் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றோம். அந்தவகையில் நேற்றையதினம் தலைநகரான திருகோணமலையிலே இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

இந்த இடத்தில், சரத் வீரசேகர, விமல் வீரவம்ச போன்ற சிங்கள பௌத்த பேரினவாத ஒட்டுமொத்த வடிவத்திற்கும், அவர்களுக்குப் பின்னால் இயங்கிக் கொண்டிருப்பவர்களுக்கும் நாங்கள் ஒரு செய்தியை சொல்ல விரும்புகின்றோம்.

நீங்கள் எங்கள் மீது ஆக்கிரமிப்புகளை திணித்துக் கொண்டிருந்தால், ஒரு தாக்கத்திற்கு சமனும் எதிருமான மறு தாக்கம் இருக்கும்.

அதற்கு இணையாக தமிழ் மக்களும் எழுச்சி கொண்டு கொண்டே இருப்பார்கள். உங்களுடைய ஆக்கிரமிப்புக்கள் எங்களுடைய விடுதலைக்கான வேட்கையை ஒருபோதும் தணிக்காது.

அது இன்னமும் எங்களை வீறு கொள்ளவே வைக்கும் என்ற செய்தியைச் சொல்லி, இறுதி வரை இந்த பௌத்த சிங்கள பேரினவாதத்துக்கு எதிராக போராடுவோம் என்ற அந்த செய்தியையும் சொல்லி வைக்க விரும்புகிறோம் என தெரிவித்துள்ளார்.

## யாழ். தையிட்டி விகாரையில்...

வரை முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பூஜை வழிபாடுகள் மற்றும் மக்களுக்கான மதிய அன்னதானமும் இடம்பெற்றது. பேரணியில் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் விகாரைக்கு ஆதரவு தெரிவித்து பதாதைகளை தாங்கியவாறு நின்றனர். இதன்போது யாழ்ப்பாண சிவில் சமூக நிலைய தலைவர் அருண் சித்தார்த் கருத்துரைக்கையில்,

இலங்கையில் அனைவருக்கும் அனைத்து மதங்களையும் மதிக்கின்ற மத வழிபாடுகளை மேற்கொள்ளும் சுதந்திரம் உண்டு. தையிட்டி விகாரை யாழ்ப்பாண மாவட்ட வரைபடத்தில் 1959ஆம் ஆண்டு விகாரைக்குரிய பகுதி என குறிக்கப்பட்டுள்ள நிலமாகும்.

இது பொதுமக்களின் காணிகள் அல்ல. விகாரை அழிவடைந்த காலத்தில் பொது மக்கள் அக்காணியை கையகப்படுத்தி, தமது குடியிருப்பினை மேற்கொண்டிருந்தனர்.

ஆனாலும், அது விகாரைக்குரிய நிலமாகவே காணப்படுகிறது. பொதுமக்களின் காணியில் விகாரை அமைக்கப்பட்டால், அவர்கள் நீதிமன்றத்தினை நாட முடியும். ஒவ்வொரு மதத்தையும் இனத்தையும் கூறி இனவாதம் மற்றும் மதவாதத்தினை எவரும் தூண்ட முயற்சிக்க வேண்டாம் என அருண் சித்தார்த் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அண்மையில் யாழ் . நல்லூர் பகுதி ஹோட்டல் உரிமையாளர் தாக்கப்பட்ட சம்பவத்தில், அருண் சித்தார்த், மனைவி, மனைவியின் சகோதரி ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சம்பந்தனின் வேண்டுகோளிற்...

ஒன்று ஏற்பாடாகி இருந்தது. அந்த நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மற்றும் பலருடைய வேண்டுகோள்களுக்கு அமைய இன நல்லிணக்கத்தை பாதுகாக்கும் வகையிலும் இரத்துச்செய்யப்பட்டதாக திருகோணமலை மாவட்ட தமிழரசு கட்சியின் மாவட்டத்தலைவர் குகதாசன் தெரிவித்தார்.

குறித்த செய்தியாளர் சந்திப்பில் மாவட்ட செயலாளர் செல்வராசா மற்றும் பொருளாளர் சுரேஷ் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

அந்தவகையில் குறித்த இடத்தில் இடம்பெறவுள்ள நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள திருகோணமலையில் இருந்து கண்டி நோக்கிய பாதயாத்திரை இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மீண்டும் குரங்குகளுக்கு ஆப...

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (12.05.2023) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு மாகாணத்தின் ஆளுநர் பதவி என்பது ஒரு ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு உட்பட்ட பதவிக்கு சமனானது.

ஆளுநர்களை நியமிப்பது மாற்றுவது ஜனாதிபதியின் அதிகாரமாக காணப்படுகின்ற நிலையில் முறைகேடுகள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாதவர்களை ஜனாதிபதி ஆளுநர்களாக நியமிக்க வேண்டும்.

வடக்கில் ஆளுநர் மாற்றம் இடம்பெறப்போவதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் கடந்த காலங்களில் நிர்வாக முறைகேடுகளில் சிக்கிய ஒருவர் ஆளுநராக வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த நபர் நாட்டின் ஜனநாயகத்திற்கு அடிப்படையாக விளங்குகின்ற தேர்தலை தடுப்பதற்காக திடீர் பதவி விலகலை செய்து தேர்தலை பிற்போடுவதற்கு பிரதான காரணமாக அமைந்தவர்.

மக்களின் ஜனநாயக உரிமையை வெளிப்படுத்தும் தேர்தலுக்கு மதிப்பளிக்காமல் சுகபோகங்களுக்காக விலைபோகிறவர்கள் எவ்வாறு மக்கள் பணி செய்வார்கள்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடமாகாண மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுடன் வாழ்ந்து வரும் நிலையில் அவர்களுக்கான தேவைகள் நிர்வாக ரீதியான உதவிகளை சலுகைகளுக்கு விலைபோகாத ஆளுநரால் மட்டுமே செய்யமுடியும்.

ஆகவே ஆளுநர்களை மாற்றும் போது மக்களுக்காக சேவை செய்யக்கூடிய ஊழல் முறைகேடுகளுடன் தொடர்பு அற்றவர்களை ஆளுநராக மாகாணங்களுக்கு நியமிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# இலங்கை தமிழ் அரசு கட்சி அலுவலகத்தில் களேபரம்: ஆனோல்ட்டினால் தாக்கப்பட்டவர் வைத்தியசாலையில்!

இலங்கை தமிழ் அரசு கட்சியின் அலுவலகத்திற்குள், முன்னாள் யாழ் மாநகரசபை முதல்வர் இ.ஆனோல்ட்டால் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்படும் ஒருவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

நேற்று (13) மாலை 5.30 அளவில் இந்த சம்பவம் நடந்தது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மார்ட்டின் வீதி அலுவலகத்தில் நேற்று மாலை, யாழ் தொகுதிக்கிளை கூட்டம் நடந்தது. கூட்டம் முடிவடைந்த பின், அலுவலக வளாகத்தில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தமிழரசுகட்சியின் உறுப்பினரும் சிவசேனை செயற்பாட்டாளருமான ஜெயமாறன் என்பவரே தாக்கப்பட்டார்.

“சிவசேனையில் உள்ள உனக்கு தமிழ் அரசு கட்சியில் என்ன வேலை? நாங்கள் சொல்லும் சட்டத்திட்டத்தின்படிதான் நடக்க வேண்டுமென கூறி, என் கன்னத்தில் அடித்தார். நான் நிலத்தில் விழுந்து விட்டேன். கட்சி பிரமுகர்கள், உறுப்பினர்கள் பலர் அங்கிருந்தனர். யாரும் எதுவும் செய்யவில்லை. நான் எனது சகோதரனுக்கு தொலைபேசியில் அறிவித்து, வைத்தியசாலையில் அனுமதியாகினேன்“ என தாக்கப்பட்ட ஜெயமாறன், குறிப்பிட்டார்.

இந்த சம்பவம் பற்றி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
தொலைபேசி :
+94 76 567 3339

# கல்முனை கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் :

## சம்பியனானது பஹ்ரியா இரண்டாமிடம் கல்முனை மிஸ்பாஹ் வசமானது !





கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட கல்முனை கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகள் கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளரும், கல்முனை கோட்டக்கல்விப் பணிப்பாளருமான ஏ.பி.பாத்திமா நஸ்மியா சனூஸ் தலைமையில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்று இறுதி நாள் நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை (12) கோலாகலமாக நடைபெற்றது.

வைபகரீதியாக இடம்பெற்ற இறுதி நாள் நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கோட்டமட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் நிர்வாக பிரதிக்கல்வி பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர், கல்முனை கல்வி மாவட்ட பிரதம பொறியலாளர் ஏ.எம். ஸாஹிர், வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், கல்முனை மாநகர உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அசீம், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா காரியப்பர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் உதவிக்கல்வி பணிப்பாளர் யூ.எல்.எம். சாஜித் உட்பட பிரமுகர்கள் பலரும் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

கல்முனை கோட்டத்தில் உள்ள கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரியநீலாவணை ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்கள் இந்த விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியதுடன் 125 போட்டி நிகழ்சிகள் நடைபெற்று வெற்றிபெற்ற வீரர்கள் இறுதிநாள் நிகழ்வில் பரிசில்கள், பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை மாணவர்களின் கண்கவர் அலங்கார அணிவகுப்புக்களும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்ற இறுதிநாள் நிகழ்வில் கோட்டத்தின் அதிபர்கள், பாடசாலைகளின் பிரதிநிதிகள், உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், ஏற்பாட்டாளர்கள் என பலரும் கலந்துகொண்டு மாணவர்களை உற்சாகப்படுத்தினர். புள்ளிகளின் அடிப்படையில் இந்த வருடம் பவள விழா காணும் கல்முனை கமு/கமு/அல் - பஹ்ரியா மகா வித்தியாலயம் கோட்டத்தின் சம்பியன் பட்டத்தையும், இரண்டாம் இடத்தை கல்முனை கமு/கமு/ அல் - மிஸ்பா மகா வித்தியாலயம் தனதாக்கி கொண்டது குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவில் சிறுமியொருவரை கடத்த முயற்சி!

## பொலிஸார் தீவிர விசாரணை



பகுதியில் இரு இளைஞர்கள் இணைந்து சிறுமி ஒருவரை கடத்த முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் சந்தேகநபரான இளைஞரொருவரை மக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று (13.05.23) கைவேலிப்பகுதியில் 10 வயதுடைய பாடசாலை சிறுமி தனியார் வகுப்பிற்காக உந்துருளியில் தாயாரினால் அழைத்து வரப்பட்டு இறக்கிவிடப்பட்ட நிலையில் வீதியில் உந்துருளியில் சென்ற இளைஞர்கள் சிறுமியினை அழைத்து கையினை பிடித்துக் கொண்டு முகத்தினை துணியால் பொத்திப்பிடித்த போது சிறுமி மயங்கி விழுந்துள்ளார்.

வீதியால் சென்ற மக்கள் இதனை அவதானித்து சத்தமிட்ட போது இளைஞர்கள் தப்பி ஓடியுள்ளார்கள்.

சிறிது நேரத்தின் பின்னர் கண்விழித்துக்கொண்ட சிறுமியின் தகவலின் படி குறித்த பகுதியினை சேர்ந்த இளைஞனின் பெயரினை சிறுமி கூறியதற்கு இணங்க கிராம அபிவிருத்தி சங்கத்தினர் இளைஞனை அழைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் 23 அகவையுடைய 02 ஆம் வட்டாரம் கோம்பாவில் பகுதியினை சேர்ந்த இளைஞனை கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

பாதிக்கப்பட்ட சிறுமியினையும் அவரது தாயாரினையும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்காக கொண்டுசென்று அங்கு சட்டவைத்திய அதிகாரியின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கு அமைய சிறுமி மருத்துவமனையில் தங்கவைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

# ஆதி கதிர்காமம்

## கபில்வத்தை யாத்திரை ஆரம்பம்




இலங்கையில் சித்தர்களின் தாய் வீடு என்று போற்றப்படும் ஆதி கதிர்காமம் கபில்வத்தைக்கான அற்புதமான, அமானுஷ்யமான, ஆபத்தான கபில்வத்தை காட்டுவழி யாத்திரை நேற்று (13) சனிக்கிழமை காலை மொனராகலையிலிருந்து ஆரம்பமாகியது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான 30 பக்தர்கள் அடங்கிய குழுவினர் இதில் பங்கு பற்றுகின்றனர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன் உப தலைவர் மனோகரன் ஏற்பாட்டில் மற்றும் நமசிவாய சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகளின் வழிகாட்டலில் யாத்திரை ஆரம்பமாகியது. சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமை இரு தினங்களும் கபில்வத்தையில் தங்கியிருந்து வழிபாட்டியற்றுவார்கள்.

எந்த வித வெளியுலக தொடர்புமே இல்லாத சித்தர்களின் புனித பூமி, முருக பெருமான் தவமியற்றி, அற்புத சக்திகளை பெற்று ஆதி சமாதியாகி ஒளியில் கலந்த அற்புத இடம், நவகோடி சித்தர்களுக்கும் முருக பெருமான் தவத்தை கற்று கொடுத்த இடம், போகர் பெருமான் ஆதியில் தவமியற்றிய தபோவனம்,

மூகதிர்காமத்தில் ஆதியில் இருந்த போகர் பெருமான் நவ பாஷாணங்களை கொண்டு உருவாக்கிய நவ பாஷாண வேல், நவாக்ஷரி யந்திரத்தை மறைத்து வைத்த இடம், கஜபாகு மன்னன் முதல்  முதலில் இலங்கையில் கண்ணகி வழிபாடு நடத்திய இடம்,.இன்று வரை இலங்கையில் சிம்மாசனத்தில் அமரும் அரசர்கள், அமைச்சர்கள் யாராக இருந்தாலும் இங்கு சென்று வழிபாடு நடத்தியபின் தான் பதவியில் அமர் வது சாசனமாகவே உள்ளது, முதல் முதலில் சிங்கள வரலாற்றில் துட்டகைமுனு இங்கு தொடங்கி வைத்தான்,

இன்று வரை வேற்று கிரக வாசிகள் வந்து இறங்கும் அற்புத இடமாக இந்த இடம் போற்றபடுகிறது..




வெளிவரவிருக்கும்
தேசியம் வாராந்த பத்திரிகையின்
விளம்பர விலைப்பட்டியல்

தேசியம் www.thesiyamnews.com THESIYAM
NEWSPAPER SIZES, RATE PER EDITION & ORDER FORM

WEEKLY NEWSPAPER

| BLACK & WHITE ADVERTISEMENT | | COLOUR ADVERTISEMENT | |
|---|---|---|---|
| Front Page Top | 2000/= | Front Page Top | 4500/= |
| Front Page Bottom | 4000/= | Front Page Bottom | 6000/= |
| Back Quarter Page | 6000/= | Back Quarter Page | 8000/= |
| Back Half Page | 8000/= | Back Half Page | 10000/= |
| Back Full Page | 12000/= | Back Full Page | 22000/= |
| Inner Quarter Page | 3500/= | Inner Quarter Page | 5000/= |
| Inner Half Page | 6000/= | Inner Half Page | 8000/= |
| Inner Full Page | 10000/= | Inner Full Page | 15000/= |
| Inner Box Ad | 800/= | Inner Box Ad | 1200/= |

Tel : 94 76 567 3339
E-mail : thesiyamnews@gmail.com | Web : www.thesiyamnews.com

CREATIVE DESIGNER
every design has a story
Logos | Flyers | Banners | Name Boards | Brochures | Catalogue | Magazines | News Papers | Product Packaging | Social Media Ads | Badges | Menu | Posters | Vouchers
+94 77 3828 594
kkcreativedesigner@gmail.com
kkcreativedesigner